முழுப் பதிப்புரிமையுடையது / *All Rights Reserved*

# தமிழ்வழி பரீட்சைகள்

## தரம் 08

## முதலாம் தவணைப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்
## First Term Examination - Model Paper

தமிழ் மொழியும் இலக்கியமும் I,II
Tamil Language and Literature I,II

இரண்டு மணித்தியாலம்
Two hours

**ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil**
077 2400 707 / 076 8044 959
மல்லாவிக் கஜன் (ஆதித்தியன்)
Group e.way தமிழ்வழி

தமிழ் இனிது கல்வி நிலையம்
பாலிநகர், வவுனிக்குளம்
புவியியல் ACCOUNTING WORLD
2ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
புவியியல், தமிழ் பிரத்தியேக வகுப்புக்கள்

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி I மொத்தப் புள்ளிகள் [ ]
பகுதி II மொத்தப் புள்ளிகள் [ ]
இறுதிப் புள்ளிகள் [ ] **100**

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** “ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” - இங்கு **ஓம்பல்** என்பதற்கு **நிகரான சொல்.**
1. கெடுத்தல் 2. கொடுத்தல் 3. பாதுகாத்தல் 4. விரும்புதல்

**2.** “பேராசிரியர் உவைஸ் அவர்களின் பணிகள் விதந்து குறிப்பிடத்தக்கன” - இங்கு **விதந்து** என்பதன் ஒத்தசொல்.
1. மறைவின்றி 2. சிறப்பித்து 3. அழகுபடுத்தி 4. வெளிப்படையாக

**3.** “நல்லம்மாவுன் தோழியுடன்
நாளுங் கூடித் திரிகின்றாய்” - இங்கு **தோழி** என்பதன் ஒத்தசொல் **அல்லாதது**.
1. பாங்கன் 2. நண்பி 3. சிநேகிதி 4. ஷகி

**4.** “போனவன்தான் வரும் அவதி போயிற்று” - இங்கு **அவதி** என்பதன் ஒத்தசொல்.
1. உண்மை 2. துன்பம் 3. ஆட்சி 4. உயிர்

**5.** “இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்குமா என்கிற ஐயப்பாடு அவர் உள்ளத்தில் எழுந்தது” - இங்கு **ஐயம்** என்பதன் எதிர்ச்சொல்.
1. சந்தேகம் 2. தோல்வி 3. உறுதிப்பாடு 4. தெளிவு

**6.** கம்பராமயாணத்திலே **ஒரேயொரு** பாட்டை உடையவன்.
1. இராமன் 2. அனுமன் 3. சத்துருக்கன் 4. இராவணன்

**7.** “கடலில் தத்தளித்த மீனவர்கள் கொம்பாஸைப் பயன்படுத்தி கரை சேர்ந்தனர்” - இங்கு **கொம்பாஸ்** (Compass) எனக் குறிப்பிடப்படுவது எதனையாகும்?
1. ஒலிவாங்கி 2. நுணுக்குக்காட்டி 3. தொலைநோக்கி 4. திசையறிகருவி



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

**8.** தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்தக் குறில் எண்ணிக்கை.
1. 05 2. 133 3. 90 4. 95

**9.** **"பேராசிரியர் ம.மு உவைஸ்"** எனும் கட்டுரையை எழுதியவர்.
1. கவிமணி. தேசிய விநாயகம்பிள்ளை 2. க. சச்சிதானந்தன்
3. மு. வரதராசன் 4. பேராசிரியர் சி. தில்லைநாதன்

**10.** **பத்து** ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியை அழைப்பது.
1. தசாப்தம் 2. சகாப்தம் 3. சஷ்டியப்தம் 4. சதாப்தம்

**11.** **செம்மை** - என்பது
1. சினைப்பெயர் 2. இடப்பெயர் 3. பண்புப்பெயர் 4. கூட்டுப்பெயர்

**12.** **ஓடினான்** - என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள **கால இடைநிலை.**
1. இ 2. இன் 3. ஆன் 4. ன்

**13.** **"**பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்**"** - இங்கு **'இல்'** உருபு பெற்றுவந்த பொருள்.
1. காரணம் 2. நீங்கல் 3. இடம் 4. உடைமை

**14.** "அயோத்தியை ஆண்ட இராமன் குடிமக்களுக்கு இனியன்" - இங்கு **இனியன்** என்பது.
1. தெரிநிலை வினைமுற்று 2. முற்றுவினை
3. குறிப்பு வினைமுற்று 4. வியங்கோள் வினை

**15.** கட்டுரையொன்றில், கட்டுரையாசிரியர் தனது கருத்தை முன்வைக்கக்கூடிய **கட்டுரை உறுப்பு.**
1. அறிமுகம் 2. முகவுரை 3. முடிவுரை 4. உள்ளடக்கம்

**16.** "ஆசிரியரோடு மாணவன் வந்தான்" - இங்கு **'ஓடு'** உருபிற்குப் **பதிலாகப்** பயன்படுத்தக்கூடிய **சொல்லுருபு.**
1. ஆக 2. கொண்டு 3. உடைய 4. உடன்

**17.** "தம்பி ஓவியம் வரைந்தான்" - இங்கு **வரைந்தான்** என்பது,
1. தெரிநிலை வினை 2. முற்றுவினை 3. குறிப்பு வினை 4. செய்வினை

**18.** **பறவை** - என்பது.
1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. காரணவிடுகுறிப்பெயர் 4. தொழிற்பெயர்

**19.** **"கூண்டிற்கிளி"** என்ற கட்டுரையின் எந்தத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?
1. கம்பன் கலை 2. பறவைகள்
3. கவிதைப் பூம்பொழில் 4. இலங்கைத் தமிழ் இலக்கியம்

**20.** கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) அவர் தீட்டிய திட்டத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.
(ஆ) தம் நண்பர்களை ஒருங்குகூட்டிச் சந்தித்தார்.
(இ) தம் திட்டத்தைப் போர் வீரர்களுக்குத் தெரிவித்தார்.
(ஈ) அவர்களுடன் கலந்தாலோசித்தார்**;** படைகளை ஒன்று திரட்டினார்.
(உ) சிலந்திப் பூச்சியை நினைத்துக்கொண்டே ஊக்கத்தோடும், உறுதியோடும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார்.
1. அ, இ, ஆ, உ, ஈ 2. உ, ஈ, ஆ, இ, அ
3. உ, ஆ, ஈ, இ, அ 4. உ, இ, ஆ, அ, ஈ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி / Part - II

**01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.**

**கொட்டிடுவாய் மழையே – நாங்கள்**
**குதூகலம் எய்திடவே**
**சொட்டுச் சொட்டாய்த் தொடங்கி – மழையே**
**'சோ'வெனப் பெய்திடுவாய்.**

**வளைவுகட்டி வைத்தே - பெரியார்**
**வரவு நோக்குதல் போல்**
**வளைந்த வானவில்லும் - உனது**
**வருகை காட்டிடுமே.**

**நெற்றியில் நீர் சொரிய – உழவர்**
**நிலம் உழுத பின்பும்**
**வற்றிய குட்டை கண்டால் - உடனே**
**மாமழை பெய்திடுவாய்.**

(அ) 'மழை நன்றாகப் பெய்தல் வேண்டும்' என்பதைக் குறிக்க, கவிஞர் பயன்படுத்தும் **இரண்டு** தொடர்களை எழுதுக.
(ஆ) **வானவில்** பற்றி கவிஞர் கூறுவது என்ன?
(இ) உழவனுக்கும் மழைக்கும் இடையேயுள்ள **தொடர்பு** என்ன?
(ஈ) உழவனது கடின உழைப்பு இங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
(உ) **ஒத்தபொருள்** தருக.
(1) குதூகலம் (2) குட்டை **(10 புள்ளிகள்)**

**02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(அ) விஞ்ஞானமும் மனித வாழ்வும்
(ஆ) ஒழுக்கத்தின் உயர்வு
(இ) கடற்கரையில் ஓர் மாலைப் பொழுது
(ஈ) நான் ஒரு பறவையானால்..... **(15 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து ஏறக்குயை 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

சுகவீனமுற்றிருக்கும் உங்கள் உறவினர் ஒருவருக்கு ஆறுதல் கூறியும், அவர் நலமுற வேண்டிப் பிரார்த்தித்தும், அவ் உறவினருக்கு ஒரு **கடிதம்**.

**அல்லது**

உங்கள் பிரதேசத்தின் சிறப்புகளை விவரித்து, அவற்றைப் பார்வையிட வருமாறு அழைத்து உமது நண்பன் **அல்லது** நண்பிக்கு ஒரு **கடிதம்.**

**(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

**1)** பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்?
**2)** நூல் வாசிப்பால் ஏற்படக்கூடிய நன்மைகள் **இரண்டு** தருக.
**3)** **"**நூல்களை ஒருவர் விரும்பி வாசிக்க வேண்டும் வாசிக்குமாறு ஒருபோதும் வற்புறுத்தக் கூடாது**"** – இக் கூற்று **யாரால் யாருக்குக்** கூறப்பட்டதாகும்?
**4)** **வேற்றுமை** என்றால் என்ன?


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

5) **முதலெழுத்துக்கள்** - என்பதனுள் உள்ளடங்கும் எழுத்து வகைகள் யாவை?
6) ஐந்தாம் வேற்றுமையின் **பொருள்கள்** யாவை?
7) கட்புலனைப் பொறுத்தவரை பறவைகள் கொண்டுள்ள **மிக உயர்வான** இசைவாக்கம் எத்தகையதாகும்?
8) **காரணவிடுகுறிப்பெயர்** என்றால் என்ன?
9) வியாபாரி தனது மகன் மீது ஏன் கோபமடைந்தார்?
10) முற்றுவினையின் **இரண்டு** வகைகளும் யாவை? **(20 புள்ளிகள்)**

**05. பின்வரும் பந்தியில் வழுவுடைய சொற்களை மாத்திரம் வழு நீக்கி எழுதுக.**

இண்றைய இளைஞர்கள் உணர்ச்சிவசப்படுபவர்கள்; நாகரீக மோகம் கொண்டவர்கள்; சமுக அக்கறை அற்றவர்கள்; என்று இளைஞ்ஞர் சமுதாயத்தின் மீது சிலர் குற்றம் சுமத்துகின்ரனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதொன்றே.

**(05 புள்ளிகள்)**

* * *


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 3 | 11 | 3 |
| 2 | 2 | 12 | 2 |
| 3 | 1 | 13 | 3 |
| 4 | 2 | 14 | 3 |
| 5 | 4 | 15 | 3 |
| 6 | 3 | 16 | 4 |
| 7 | 4 | 17 | 1 |
| 8 | 4 | 18 | 2 |
| 9 | 4 | 19 | 3 |
| 10 | 1 | 20 | 3 |


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்